## பத்தாம் வகுப்பு – தமிழ் – முதல் திருப்புதல் தேர்வு – 2022

**விடைக்குறிப்பு**

### பகுதி – I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1 | ஆ) மணிவகை. | 1 |
| 2 | இ) அன்மொழித்தொகை. | 1 |
| 3 | ஆ) எம்+தமிழ்+நா. | 1 |
| 4 | அ) உம்மைத்தொகை. | 1 |
| 5 | ஈ) தேவநேயப்பாவாணர். | 1 |
| 6 | ஆ) எட்டு. | 1 |
| 7 | இ) தாவரங்களின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள். | 1 |
| 8 | ஈ) ச, ரு. | 1 |
| 9 | அ) காற்று. | 1 |
| 10 | ஆ) பாண்டிய மன்னன். | 1 |
| 11 | ஈ) அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. | 1 |
| 12 | ஆ) மோனை, எதுகை. | 1 |
| 13 | அ) சீராக. | 1 |
| 14 | ஈ) அவித்துவிடாதே, மடித்துவிடாதே. | 1 |
| 15 | இ) பாரதியார். | 1 |

### பகுதி – II பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**21 –ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.**

| | | |
|---|---|---|
| 16 | உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது. | 2 |
| 17 | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>அ) உலகத்தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர் யார்?<br>ஆ) அரும்பு என்றால் என்ன? | 2 |
| 18 | **(எவையேனும் நான்கு மட்டும்)**<br>♦ உலகியல் நூறு ♦ பாவியக்கொத்து ♦ நூறாசிரியம்<br>♦ கனிச்சாறு ♦ எண்சுவை எண்பது ♦ மகபுகுவஞ்சி<br>♦ பள்ளிப்பறவைகள் ♦ திருக்குறள் மெய்ப்பொருளுரை | 2 |
| 19 | ♦ வரகு ♦ காடைக்கண்ணி ♦ குதிரைவாலி | 2 |
| 20 | ♦ இலை ♦ தாள் ♦ தோகை ♦ ஓலை ♦ சண்டு ♦சருகு | 2 |
| 21 | எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்<br>மெய்ப்பொருள் காண்ப தறிவு | 2 |

| | | |
|---|---|---|
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்** | |
| 22 | சிரித்து சிரித்துப் பேசினார். | 2 |
| 23 | அ) காற்றின் பாடல் ஆ) வனத்தின் நடனம் | 2 |
| 24 | ♦ இறகு ♦ குருதி ♦ வாள் ♦ அக்கா ♦ மதி ♦ படகு | 2 |
| 25 | வேங்கை – மரத்தைக் குறிக்கும். வேம்+கை – வேகின்ற கை | 2 |
| 26 | தேனிலே ஊறிய செந்தமிழின் – சுவை<br>தேறும் சிலப்பதி காரமதை<br>ஊனிலே எம்முயிர் உள்ளளவும் – நிதம்<br>ஓதி யுணர்ந்தின் புறுவோமோ | 2 |
| 27 | கரும்பு தின்றான் – வேற்றுமைத்தொகை. வீசு தென்றல் – வினைத்தொகை | 2 |
| 28 | அ) கலந்துரையாடல் ஆ) நவீன இலக்கியம் | |
| | **பகுதி – III. பிரிவு – 1**<br>**எவையேனும் இரண்டு வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்கவும்.** | |
| 29 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>1. நாற்று : நான் எனது தோட்டத்தில் கத்தரி நாற்று நட்டேன்.<br>2. கன்று : வாழைக்கன்று விற்பனைக்கு உள்ளது.<br>3. பிள்ளை : தென்னம்பிள்ளையை வாங்கி வந்தேன்.<br>4. பைங்கூழ் : கேழ்வரகு பைங்கூழ் மழையில்லாமல் வாடியது.<br>5. கன்று : மாங்கன்று நன்றாக உள்ளது. | 3 |
| 30 | ♦ தரிசு ♦ சிவல் ♦ கரிசல் ♦ முரம்பு ♦ புறம்போக்கு ♦ சுவல் ♦அவல்<br>♦ குளம் ♦ குட்டை ♦ ஏரி | 3 |
| 31 | அ) மொழி.<br>ஆ) நாட்டின் தனிப்பெரும் வளத்தினால்.<br>இ) ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை. | |
| | **பிரிவு – 2**<br>**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**<br>**34 –ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** | |
| 32 | ♦ நற்றிணை ♦ குறுந்தொகை ♦ ஐங்குறுநூறு ♦ பதிற்றுப்பத்து<br>♦ பரிபாடல் ♦ கலித்தொகை ♦ அகநானூறு ♦ புறநானூறு | 3 |
| 33 | அ) மயங்கச் செய் ஆ) மகரந்த – மயலுறுத்து இ) காற்றை | 3 |
| 34 | அ) தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!<br>இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!<br>மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!<br>முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!<br>ஆ) அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!<br>முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!<br>கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்<br>மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே! | |

| 35 | வ.எண் | சீர் | அசை | வாய்பாடு | |
|---|---|---|---|---|---|
| | 1 | ஒழுக்/கம் | நிரை/நேர் | புளிமா | 3 |
| | 2 | விழுப்/பம் | நிரை/நேர் | புளிமா | |
| | 3 | தர/லான் | நிரை/நேர் | புளிமா | |
| | 4 | ஒழுக்/கம் | நிரை/நேர் | புளிமா | |
| | 5 | உயி/ரினும் | நிரை/நிரை | கூவிளம் | |
| | 6 | ஓம்/பப் | நேர்/நேர் | தேமா | |
| | 7 | படும் | நிரை | மலர் | |

| | | |
|---|---|---|
| 36 | அறிந்தது – அறிதல் அறியாதது – அறியாமை<br>புரிந்தது – புரிதல் புரியாதது – புரியாமை<br>தெரிந்தது – தெரிதல் தெரியாதது – தெரியாமை<br>பிறந்தது – பிறத்தல் பிறவாதது – பிறவாமை | 3 |
| 37 | இக்குறளில் இன்னிசை அளபெடை பயின்று வந்துள்ளது.<br>செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை. | 3 |

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

| | | |
|---|---|---|
| 38 அ | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>அவையோர் அனைவருக்கும் வணக்கம்!<br>"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே<br>வாளோடு முன் தோன்றிய மூத்தக்குடி!" என்கிறது புறப்பொருள் வெண்பாமாலை.<br>தமிழ் ஐந்தாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. கற்காலம் முதல் கணினிக்காலம் வரை தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் ஒரே மொழி, நமது தமிழ் ஆகும். தனிச்சிறப்போடு கன்னித் தமிழாய் தொடர்ந்து தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்தது தமிழ். அன்னைமொழி அழகாய் அமைந்த செழுந்தமிழ். பழமைக்குப் பழமையாய் தோன்றிய மொழி. கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்டவள் தமிழன்னை.<br>திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவள். பத்துப்பாட்டாகவும் எட்டுத்தொகையாகவும் பதினெண்கீழ்க்கணக்காகவும் சிலப்பதிகாரமாகவும் மணிமேகலையாகவும் நிலைபெற்றவள். தனக்கெனத் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்டவள். வேற்று மொழியாரும் புகழும் பெருமைக்குரியவள். தேனைக் குடித்த வண்டானது சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் தமிழைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள அதன் பெருமைகளை எங்கும் முழங்குகின்றோம். சின்னக் குழந்தையின் சிரிப்பும் ஆனவள். பழுத்த நரையின் பட்டறிவும் ஆனவள். வானத்திற்கும் வையத்திற்கும் இடைப்பட்ட யாவற்றையும் கவிதையாகக் கொண்டவள். உணர்ந்து கற்றால் கல் போன்ற மனத்தையும் கற்கண்டாக்குபவள். அறிவைப் பெருக்குபவள். அன்பை வயப்படுத்துபவள். செப்புதற்கரிய அவள் பெருமையைப் போற்றுவோம். நன்றி, வணக்கம். | 5 |
| 38 ஆ | மகரந்தத்தூளைச் சுமந்து கொண்டு மனதை மயங்கச் செய்கின்ற வாசனையுடன் வா. இலைகளின் மீதும் நீரலைகளின் மீதும் உராய்ந்து வா. உயிர்வளியைக் கொடு. பேய்போல் வீசி உயிராகிய நெருப்பை அணைத்து விடாதே. நீடித்து நின்று நன்றாக வீசு. உன் சக்தி | 5 |

| | | |
|---|---|---|
| | குறைத்து எம் உயிரை அவித்து விடாதே. உம்மை நாம் பாடுகிறோம், புகழ்கிறோம், வழிபடுகிறோம் என்றெல்லாம் பாரதியார் பாடுகிறார். | |
| 39<br>அ | விடுநர்<br>பெறுநர்<br>பொருள்<br>விளித்தல்<br>இப்படிக்கு<br>இடம், நாள்.<br>உறைமேல்முகவரி | 5 |
| ஆ | முகவரி, நாள்<br>விளித்தல்<br>கருத்துரை<br>இப்படிக்கு<br>உறைமேல்முகவரி | 5 |
| 40 | (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)<br>காற்றே உன் அருமை தெரியவில்லை!<br>மூச்சுக்கு நீ முக்கியம் புரியவில்லை!<br>மரமெல்லாம் நாங்கள் அழித்தோம்!<br>பல நோய்களுக்கு ஆளாகிவிட்டோம்!<br>வெட்டிய மரங்களுக்கு அளித்த விலை!<br>தொட்டிச் செடியுடன் நடமாடும் நிலை! | 5 |
| 41 | **படிவம் (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)** | 5 |
| 42 | (அ) **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>பிறர் மனம் மகிழும். அறம் வளரும். புகழ் பெருகும். நல்ல நண்பர்கள் சேருவர்.<br>அன்பு நிறையும். | 5 |
| | (ஆ) தங்கக் கதிர்களைக் கொண்ட கதிரவன் காலையில் உதிக்கின்றது. தன் பொன்னிறக் கதிர்களால் இருளை விரட்டுகிறது. வெண்ணிற மேகமானது அங்குமிங்கும் நகர்கிறது. வண்ணநிறமான பறவைகள் காலையில் தன் இசைக்கீதத்தை இசைக்கின்றன. சுறுசுறுப்பான வண்ணத்துப் பூச்சிகள் மலர்களைச் சுற்றி நடனமாடுகின்றன. மலர்களின் நறுமணம் காற்றை நிரப்புகிறது. தென்றல்காற்று எங்கும் வீசி இதமான சூழலைத் தருகிறது. | 5 |
| | பகுதி – V<br>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். | |
| 43<br>அ | **தமிழின் சொல்வளம்**<br>சொல்வளம் அனைத்துச் செம்மொழிகளுக்கும் பொதுவே எனினும் அதில் தமிழ் மட்டும் தலைசிறந்ததாகும். தமிழ்ச் சொல்வளம் பலதுறைகளில் சிறப்பாக விளங்குகிறது. தமிழில் தோன்றி தமிழுக்கே சிறப்பாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன என்கிறார் கால்டுவெல். | 8 |

| | | |
|---|---|---|
| | ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம் புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவு உடையவர். எத்துணையோ மொழிகளில் இருந்து கடன்கொண்ட ஆங்கில மொழியில் இலையைக் குறிக்க டுநயக என ஓரேசொல்தான் உள்ளது. ஆங்கில இலக்கியத்தில் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தார்களே தவிர, தமிழைப் போல தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்ததில்லை.<br>தமிழ்ச்சொல் எத்துணைப் பொருள்வளமுடையது என்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிறநாடுகளில் உள்ள கூலங்கள் சிலவாகவும் தமிழ்நாட்டில் உள்ள கூலங்கள் பலவாகவும் வகைப்படுத்தப்பட்டு இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கோதுமையை எடுத்துக்கொண்டால் அதில் சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகளே உண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன்சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. இவற்றோடு வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை. | |
| 43 ஆ | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>**தமிழின் தொன்மை**<br>உலக மொழிகளுள் தலை சிறந்ததாகவும் செம்மை நிறைந்ததாகவும் விளங்கும் மொழி தமிழ்மொழி. இலெமூரியாப் பகுதியில் வாழ்ந்த தமிழர்தம் உலக நாகரிகத்திற்கு வித்திட்டனர். ஹரப்பா நகரங்களில் தமிழ் முத்திரைகள் காணப்படுகின்றன. உலக மொழிகளில் பழமையானவைகளில் சிறந்த மொழியாக தமிழ் உள்ளது.<br>"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே<br>வாளொடு முன்தோன்றி மூத்தகுடி தமிழ்க்குடி" என்கிறது புறப்பொருள் வெண்பாமாலை.<br>**இலக்கிய வளம்**<br>ஒரு மொழியின் செம்மையை அதன் இலக்கியங்கள் மூலம் அறியலாம். சங்க இலக்கியங்களைப் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்று அழைப்பதோடு எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்றும் அழைப்பர். அகம், புறம் என்ற வாழ்வியலை மையப்படுத்திய கருத்துகளின் தொகுப்பாகும். வாழ்வை நெறிப்படுத்தும் அற இலக்கியங்களைக் கொண்டதாக பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அமைகின்றன. மேலும் காப்பியங்கள், சிற்றிக்கியங்கள், தனிப்பாடல்கள், இடைக்கால புலவர்களின் படைப்புகள், கவிதை, புதினம், சிறுகதை என்ற பன்முக படைப்புகள் சொல்லில் அடங்காதவை.<br>**சொல்வளம்**<br>சொல்வளம் அனைத்துச் செம்மொழிகளுக்கும் பொதுவே எனினும் அதில் தமிழ் மட்டும் தலைசிறந்ததாகும். தமிழ்ச் சொல்வளம் பலதுறைகளில் சிறப்பாக விளங்குகிறது. தமிழில் தோன்றி தமிழுக்கே சிறப்பாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன என்கிறார் கால்டுவெல். | 8 |

| | | |
|---|---|---|
| 44<br>அ | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>**பசித்தவருக்கு உணவிடுதல்**<br>உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தேரே என்ற புகழ் மொழிக்கேற்ப வீடுகள்தோறும் இரந்தும் பசியறாது அயர்ந்தவர்களுக்கு வள்ளலார் அறச்சாலையை நிறுவி உணவளித்தார். பசித்தவனுக்கு உணவளித்தல் என்பது தமிழரின் பண்பாடாக விளங்குகிறது. பசிப்பிணி போக்குதல் சிறந்த அறமாகக் கருதப்பட்டது. பசியால் வருந்தும் ஒருவருக்கு அந்நேரத்தில் உணவளிப்பது அவருக்குப் புத்துயிர் அளிப்பதாக இருக்கிறது.<br>**விருந்தினருக்கு உணவிடுதல்**<br>விருந்தினருக்கு உணவிடுதல் என்பது நாச்சுவைக்காகவும் விருந்தோம்பல் காரணமாகவும் உணவிடப்படுகிறது. தமிழர்கள் விருந்திணர்களை எதிர்நோக்கி வாழ்ந்தனர். விருந்தோம்பல் முறைகள் வேறுவெறாக இருந்தாலும் எல்லாச் சமூகங்களிலும் இப்பண்பாடு போற்றப்படுகிறது. விருந்தினரை உளமாற வரவேற்று விருந்தளிக்கும் முறைபற்றி பல இலக்கியங்கள் கூறுகின்றன. | 8 |
| 44<br>ஆ | **(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக)**<br>கிராமத்து வெள்ளந்தி மனிதர்கள் காட்டும் விருந்தோம்பல் எப்போதும் பசுமையாக நினைவில் இருக்கும். இயல்பான வரவேற்பு, தம்மிடம் இருப்பதையே பகிர்ந்து கொடுக்கிற நேயம் எனத் தனித்துவமாக இருக்கும். அப்படி ஒரு விருந்தோம்பலைக் காணலாம்.<br>அருகு எடுத்தல்–அன்னமய்யாவின் கருணை–பெயர்ப்பொருத்தம்–சுப்பையாவின் வரவேற்பு. இது போன்று தலைப்பிட்டு விரிவாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்குக. | 8 |
| 45<br>அ | **சான்றோர் வளர்த்த தமிழ்**<br>முன்னுரை<br>பொருளுரை<br>முடிவுரை | 8 |
| 45<br>ஆ | **மழைநீர் சேகரிப்பு**<br>முன்னுரை<br>பொருளுரை<br>முடிவுரை | 8 |